SURESH' IAS ACADEMY



# 19.04.2026 செய்திகள்

## கர்நாடக உயிரியல் பூங்காவுக்கு வந்த நான்கு சிவிங்கிபுலிகள்



- தென்னாப்பிரிக்காவில் இருந்து கொண்டு வரப்பட்ட நான்கு சிவிங்கிபுலிகள், கர்நாடகாவின் பெங்களூருவில் உள்ள பன்னரகட்டா உயிரியல் பூங்காவில் பராமரிப்புக்கு விடப்பட்டன.

- நம் நாட்டில், 70 ஆண்டுகளுக்கு முன் அழிந்து போன சிவிங்கிபுலிகளை மீண்டும் கொண்டு வரும் வகையில், சிவிங்கிபுலி மறுவாழ்வு திட்டத்தை மத்திய அரசு 2022ல் முன்னெடுத்தது.

- தென்னாப்பிரிக்கா மற்றும் ஆப்ரிக்க நாடான நமீபியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட சிவிங்கிபுலிகள், மத்திய பிரதேசத்தின் குனோ தேசிய பூங்காவிலும், காந்தி சாகர் சரணாலயத்திலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

- பருவ நிலை மற்றும் வானிலை மாற்றம் காரணமாக, தென்னாப்பிரிக்காவில் இருந்து பெங்களூரு வந்துள்ள இந்த சிவிங்கிபுலிகளுக்கு, உடல் நல பிரச்னைகள் ஏற்படாத வகையில் கண்காணிக்கப்பட வேண்டும். இந்த விலங்குகள் 30 நாட்களுக்கு தனிமைப்படுத்தப்பட்ட, பரிந்துரைக்கப்பட்ட உணவு வழங்கப்பட வேண்டும்.